கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 29.10.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பாக பசுமைக்குடில் கட்டுமானம் மற்றும் பயிர் சாகுபடி குறித்த சிறப்பு பயிற்சி விரைவில் நடைபெற உள்ளது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சியில் பசுமைக்குடில் அமைப்பு, கட்டுமானப் பொருட்களின் தேர்வு, பாசன முறை, தாவர மேலாண்மை, நோய் மற்றும் பூச்சி கட்டுப்பாடு, சந்தைப்படுத்தல் ஆகிய தலைப்புகள் குறித்து நிபுணர்கள் வழிகாட்டுவர். பயிற்சி அக்டோபர் 30 முதல் நவம்பர் 28 வரை நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்புவோர், அக்டோபர் **30**க்குள் தங்களின் பெயர், முகவரி, தொடர்பு எண் ஆகிய விவரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். பயிற்சியில் பங்கேற்க குறைந்தது 12ஆம் வகுப்பு கல்வி தகுதி பெற்றவராக இருக்க வேண்டும். வேளாண், தோட்டக்கலை, பாலிடெக்னிக் அல்லது பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் தொழில்முனைவு மற்றும் வேலை வாய்ப்புகள் குறித்த வழிகாட்டலும் வழங்கப்படும்.

**மேலும் விவரங்களுக்கு:**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு பொறியியல் துறை,
வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை–3
மின்னஞ்சல்: swc@tnau.ac.in
தொலைபேசி எண்: 9789982772

**மக்கள் தொடர்பு அலுவலர்**